Bodhi International Journal of Research in Humanities, Arts and Science
Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

# மானுடவியல் நோக்கில் பதிற்றுப்பத்து

**முனைவர். மு.சி.ராஜசீமா**

*உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை, ஸ்ரீகாளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி*

Open Access

Manuscript ID:
BIJ-SPL4-Jan26-MD-129

Subject: Tamil

Received : 23.09.2025
Accepted : 22.01.2026
Published : 31.01.2026

DOI: 10.64938/bijsi.v10si4.26.Jan129

Copy Right:

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License.

**ஆய்வுச்சுருக்கம்**

*பதிற்றுப்பத்து என்பது சங்க இலக்கியப் புதையல்களுள் ஒன்று. மானுடவியல் நோக்கில் ஆராயும் பொழுது சங்ககால மக்களின் வாழ்வியல், சமூக அமைப்பு, பண்பாட்டு மரபு, பொருளாதாரம் போன்றவைகள் வெளிப்படுகின்றன. இருப்பினும் இந்நூல் இலக்கியப் படைப்பாக மட்டுமல்லாமல் சங்ககால மக்களின் வாழ்வுகளை வெளிப்படுத்தும் மானுடவியல் ஆவணமாகவும் மனித வாழ்வின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்தும் வரலாற்றுச் சான்றாகவும் விளங்குகின்றன. அதன் அடிப்படையில் சேர மன்னர்களின் வெற்றிச்சிறப்பு, கொடை த்தன்மை, வீரம், இசை மற்றும் உணவு பற்றிய செய்திகளைக் காண்பது ஆய்வின் நிலைக்களமாக அமைகின்றது.*

***திறவுச்சொல்:*** *பத்துப்பாட்டு, மானுடவியல், சேர மன்னர்கள்.*

## திறவுகோல்

பதிற்றுப்பத்து சேர மன்னர்களின் மானுடச் செய்திகள், வாழ்க்கை முறை, மனித குலத்தின் பல்வேறுபட்ட கூறுகளை விளக்குவது மானுடவியல் ஆகும். அவற்றுள் மனிதர்களின் பண்பாட்டினை விளக்குவது மானிடவியலின் ஒரு பிரிவு ஆகும். பண்பாடு மானிடவியல் என்ற பிரிவிற்குள் அரசர்களைப் பற்றிய அறிந்து கொள்ள முயலும் பொழுது அவ்வரசர்களின் பண்பாடு, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் மற்றும் வாழ்க்கை முறை ஆகியவற்றை அறிந்து கொள்ள முடிகிறது.பதிற்றுப்பத்து என்பது மனிதனின் வாழ்வியல், சமூகம் மற்றும் கலாச்சாரப் பரிமாணங்களை உணர்ந்து கொள்ளும் மேம்பாட்டிற்கான வழிகாட்டியாகும். மேலும் மனிதர்களின் உள்ளார்ந்த இயல்புகள், பண்புகள் மற்றும் சமூக உறவுகள் எவ்வாறு வாழ்கின்றன வடிவமைக்கப்படுகின்றன என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இதன் மூலம் மனித சமூகத்தின் ஒழுங்கு வளர்ச்சியும்

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

பண்பாட்டு மரபுகள் மற்றும் சமூக மாற்றங்களின் தாக்கமும் வெளிப்படையாக விளங்கும்.

**மானுடவியல் விளக்கம்**

மானிடவியல் என்பது மனித இனம் பற்றிய ஆய்வறிதல் ஆகும். இது மனித குலத்தைச் சமூக நிலை, பண்பாட்டு நிலை, உயிரியல் நிலை போன்ற வேறுபட்ட நிலைகளில் கடந்த கால மக்களையும் சமகால மக்களையும் ஆராயும் பரந்து விரிந்த இலக்கை உடையதாக உள்ளது. பண்பாடு பற்றிய எண்ணங்களும் மனித இயல்பு பண்பாடு என்ற கருத்தும் அதாவது எங்களுடைய இனம் உலகத்தை குறியீட்டு முறையில் விளங்கிக் கொள்வதற்கும் சமூக ரீதியில் குறியீட்டு முறையில் பகிரவும் பயிற்றுவிக்கவும் அவற்றின் அடிப்படையில் உலகத்தையும் எங்களையும் மாற்றிக் கொள்வதற்கும் முழுமையான தகுதியை வளர்த்துக் கொண்டுள்ளது என்னும் கருத்துமே மானிடவியலின் அடிப்படையாகும்.

**பதிற்றுப்பத்து**

சேர அரசர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் நூல் பதிற்றுப்பத்து ஆகும். சேர அரசர்கள் 10 பேரின் வீரம், கொடை மற்றும் சிறப்பு ஆகியவற்றைத் தெளிவுபட எடுத்துரைக்கிறது. சேர நாட்டின் பண்டைய காலநிலை குறித்து அறிந்து கொள்ளவும் பயன்பாடு உடையதாக அமைந்துள்ளது.

**சேரர்கள்**

தமிழகத்தின் மூவேந்தர்களுள் ஒருவராகக் கருதப்படுபவர் சேரர் ஆவர். இவர்கள் தமிழகத்தின் மேற்குக் கரையில் அமைந்திருந்த சேர நாட்டை ஆண்ட அரசர்கள் ஆவார்கள். இவர்களின் கொடி வில்கொடி ஆகும். இதன் மூலம் அவர்கள் வில்லால் அம்பு எய்துவதில் சிறந்தவர்களாக இருந்தனர் என்பதை அறிந்து கொள்ளலாம். மேலும் இவர்கள் கருவூரையும் வஞ்சியையும் தலைநகராகக் கொண்டும் ஆண்டு வந்துள்ளனர்.

**பதிற்றுப்பத்து இயம்பும் சேர மன்னர்கள்**

1. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்
2. பல்கெழு குட்டுவன்
3. களங்காய் கண்ணி நார்முடிச் சேரல்
4. கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்
5. ஆடு கோட்பாட்டுச் சேரலாதன்
6. அந்துவஞ்சேரல் இரும்பொறை
7. பெருஞ்சேரல் இரும்பொறை
8. குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை

ஆகியோர் பதிற்றுப்பத்தில் பேசப்படும் சேர மன்னர்கள் ஆவர்.

**வெற்றிச் சிறப்பு**

வெற்றிச் சிறப்பு என்பது ஒரு அரசனு டைய வலிமையையும் வெற்றியையும் சிறப்பித்துக் கூறுவதாகும். இதன் அடிப்படையில் பதிற்றுப்பத்தில் இடம் பெற்றுள்ள சேர மன்னர்கள் வீரத்தில் சிறந்தவர்களாகக் காணப்பட்டுள்ளனர் என்பதை பதிற்றுப்பத்து பின்வருமாறு விளக்கி நிற்கின்றது.புலவர் ஒரு மன்னனின் வெற்றிச் சிறப்பைக் கூறும் பொழுதுவரம்பு இல்லாத வெள்ளம் போன்றது உன் யானைப்படை. அவற்றிற்கு கழுத்தில் வார்ப்பு மணிகள். தென்னை மரம் போல பருத்த கால்கள். அவை பகைவனுடைய காவல் மரங்களை அழிக்கின்றன. பரந்து விரிந்து கிடக்கும் நீர்த்துறைகளைக் கலக்குகின்றன. மேலும் பகைவனுடைய நாடு மூழ்கும்படி செய்கின்றன. சேர மன்னனின் வாள்

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

பகைவர்களின் மதிலை அழிக்கின்றன. வேலானது காட்டு அரணை அழிக்கிறது. வில்விசை பாய்ச்சிய அம்புகளும் அகழியில் மோதிக் கொள்கின்றன. முரசின் முழக்கங்கள் இடி போல் கேட்கின்றன. காற்றைப் போல் தடுக்க முடியாமல் உன் படை பகைவரின் மதிலைத் தாக்குகிறது. இவ்வாறு நீ தாக்குவதால் பகைவர்கள் உன்னை வெறுத்து நீங்கி ஒழிகின்றனர். அவர்கள் உன்னை வெறுப்பது நகைப்பதற்கு இடமாக உள்ளது என்று காப்பியாற்றுக் காப்பியனார் களங்காய் கண்ணி நார்முடிச்சேரல் எனும் மன்னனின் வெற்றிச்சிறப்பைப் பாடியுள்ளார். பதிற்றுப்பத்து பாடல் - 33

பெரும் சேரல் இரும்பொறையின் வெற்றிச் சிறப்பைக் கூற வந்த அரிசில் கிழார் உடலில் வலிமை பெற்றவன். உள்ளத்தில் உறுதி உடையவன். பிறருக்குக் கொடுப்பதில் அறிவு பெற்றவன்.பெண்கள் தனக்கு தகுதியானவன் யார் என்றெல்லாம் எண்ணிப் பார்த்தாலும் பிறருக்கு உவமை கூறும் படி உயர்ந்தவனாக விளங்குபவன் நீ அல்லாமல் பிறரை உனக்கு ஊமையாக காட்டும் படி ஈடு இணை இல்லாத ஒரு பெருமகனாக விளங்குபவன் என்றும் குரவை ஆட்டங்களை ஆடுவர். நிலத்தில் விரிந்து பாயும் காவிரி ஆறு ஓடும் புகார் நகரத்தில் விளையாடுவர். இப்படிப்பட்ட புகார் நகரத்தைத் தன் ஆட்சிக்குள் உட்படுத்திக் கொண்டு பூழி நாட்டு மக்களுக்கு கவசமாக விளங்குபவன் என்றும், உன்னை தாக்கிய அழிக்க வரும் பகைவர்களுக்கு உன் படை வீரர்கள் தான் பாடம் புகட்ட வேண்டும் போலும் அங்கும் நீ அறிவு மங்கி போரிடுவதைக் காண்கின்றேன்.இப்படி விளங்கும் போது உன் புகழை நான் எவ்வாறு கூறுவேன்? செய்ய முடியாமல் வருந்துகின்றேன் என்று இறைஞ்சுகின்றார்.

போரில் வெற்றி பெற்று, அந்நாட்டில் கிடைத்த பெரும் செல்வத்தை வறியவர்களுக்கு வாரி வழங்கினான் செங்குட்டுவன் என்பதை பெரிய வாயினும் அமர் கடந்து பெற்ற அரிய என்னாத ஓம்பாது வீசி (பதிற்றுப்பத்து பாடல் - 44) என்ற அடிகள் மூலம் அறியலாம்.

**கொடைத்திறன்**

கடல் பிறக்கோட்டிய சேரன் செங்குட்டுவனின் வள்ளல் தன்மையை வர்ணிக்க முனைந்த பரணர் மழையைப் போல் கொடை வழங்குபவன். மதில் வெற்றிப் பூக்களையும் வாடாத பூக்களையும் இணைத்துக் கட்டிய மாலையைத் தன் படை வீரர்களுக்கு அணிவித்து மகிழ்பவன். நீல நிறத்துடன் விளங்கும் மட்டம் என்னும் கள்ளை அவர்கள் மகிழும் வண்ணம் வைத்துக் கொள்ளாமல் வழங்குபவன். யாழை இசைத்துப் பாடும் பாணர்களின் வாழ்விற்காக குதிரைகளை வழங்கியவன். அந்தக் குதிரைகளை எண்ணிக் கணக்கிட்டால் அது கடல் அலை உடைந்து சிதறும் துளிகளைக் காட்டிலும் அதிகம் என்கின்றார்.( பதிற்றுப்பத்து பாடல் - 42)

புலவர் ஒருவர் மன்னனை வாழ்த்தும் பொழுது பலருக்கும் பகுத்தறிப்பதற்கே செல்வத்தைத் தொகுத்து வை. பிறர் நலத்தைப் பாதுகாப்பதற்காகவே வாழ் என்கின்றார்.

**பகுத்தூண் தொகுத்த ஆண்மை**

பிறர்க்கென வாழ்திநீ ஆகல் மாறே.

(பதிற்றுப்பத்து பாடல் - 38)

ஆடு கோட்பாட்டுச் சேரலாதனின் வள்ளல் பண்பை விளம்ப விரும்பிய நச்செள்ளையார் இரவலர்கள் தாமாகவே தன்னைத் தேடி வராவிட்டாலும் அவர்களை இவனே தேடிச் சென்று தேரிலே ஏற்றி வந்து வரிசை செய்பான் என்று கூறியுள்ளார்.( பதிற்றுப்பத்து பாடல் - 55) இவ்வாறு சேர மன்னர்களின் கொடைத் தன்மையை பல்வேறு நிலைகளில் புலவர்கள் காட்டி உள்ளனர்.

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

**செல்வ வளம்**

சேர மன்னர்கள் பொருளாதாரச் செழிப்போடு வாழ்ந்துள்ளனர் என்ற செய்தியையும் பதிற்றுப்பத்து எடுத்துரைக்கின்றது. மன்னர்கள் மக்களுக்கு வழங்கும் கொடை பொருள்களைக் கொண்டே அவர்களின் செல்வ வளம் எத்தகையதாக இருந்திருக்கும் என்பதை அறிய முடிகின்றது வறியோர்களுக்கு வழங்குவதிலும் படைவீரர்களுக்கு அள்ளிக் கொடுக்கும் பொருள்களின் அளவிலும் சேர மன்னர்களின் செல்வ வளத்தைக் காண முடிகின்றது. (பதிற்றுப்பத்து பாடல் - 37,43,58,65)

**வீரம்**

வீரம் என்பதற்கு வலிமை என்றும், மனத்தின்மை என்றும் பொருள் படும்.பதிற்றுப்பத்தில் உள்ள 80 பாடல்களில் 32 பாடல்கள் வீரம் பற்றிய செய்திகளைக் குறிப்பிடுகின்றன. நான்காம் பத்தில் ஆறு பாடல்களில் வீரம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன களங்காய் கண்ணி நார்முடிச்சேரலாதன் எமனைப் போல் போர்த்திறம் கொண்டவன். தும்பை மாலையைச் சூடி தன்னைப் பகைத்து வந்த பகைவர்கள் அஞ்சும் வகையில் போரில் உன் முரசு முழங்கிக் கொண்டே இருக்கும் முரசுகள் முழங்கினால் பகைவர்களின் அரண்கள் அழிவது உறுதி என்ற கருத்தை,

**காலன் அனைய கடுஞ்சின முன்ப.**

**(பதிற்றுப்பத்து பாடல் - 39)**

என்ற பாடல் அடி விளக்கி நிற்கின்றது.

ஆடு கோட்பாட்டுச் சேரலாதனின் வீரத்தை உவமை நயத்தோடு குறிப்பிட்டுள்ள காட்சி நம்மை அச்சத்தில் ஆழ்த்துகிறது. சேர மன்னன் போர் புரிகின்ற போது தலையில் அணிந்திருந்த பனந்தோடியினால் உருவாக்கப்பட்ட மாலையில் போரிட்ட பொழுது பகை நாட்டு வீரர்களின் குருதி பட்டமையால் சிவந்த இறைச்சி போலக் காணப்படுகிறது. அதைக் கண்ட பருந்துகள் அரசனின் தலையைச் சுற்றுகின்றன என்று காக்கை பாடினியார் குறிப்பிட்டுள்ளமையை,

**மறம்கெழு போந்தை வெந்தோடு புனைந்து
நிறம் பெயர் கண்ணிப் பருந்து ஊறு.**

**(பதிற்றுப்பத்து பாடல் - 51)**

என்ற பாடல் அடிகள் விளக்கி நிற்கின்றன.

புலவர் ஒரு மன்னனின் வீரத்தை கூறுங்கால், குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை, காலாட்படை ஆகிய நான்கு வகைப் படைகளும் சேர்ந்து அழித்தன. இது எவ்வாறு உள்ளது எனில் சேரன் கூற்றுவன் போல் சென்று அளித்துள்ளான் என்று குறிப்பிடுகின்றார்.

நின்படைஞர் சேர்ந்த மன்றம் கழுதை போகி.

(பதிற்றுப்பத்து பாடல் - 25)

**இசைக் குறிப்புகள்**

சேர மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இசை வல்லுநர்கள் இருந்துள்ளமையை பதிற்றுப்பத்து பறை சாற்றுகின்றது. தண்ணுமை, கிணை, பதலை, முரசு, யாழ், பெரு வங்கியம், வயிர் போன்ற கருவிகள் பதிற்றுப்பத்தில் இடம் பெற்றுள்ள மையால் அவற்றை இயற்றக் கூடிய இசை வல்லுநர்களும் இடம்பெற்றிருக்க வேண்டும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. தமிழ் இசையானது பன்னெடுங் காலத்திற்கு முன்பே நம் முன்னோர்களால் உயர்நிலையில் வைக்கப்பட்டுள்ளமையை இந்நூலின் மூலம் அறிய முடிகிறது.

**உழவு**

உழவு என்பது வேளாண்மையின் ஒரு அங்கமாக நிலத்தினில் இருந்து கலப்பையில் உழுவதன் மூலம் வளமான வாழ்க்கையை அடைய முடியும் என்று பதிற்றுப்பத்து கூறியுள்ளது. அக்கருத்தின் படி ஆறாம் பத்தில் கரையானால் அழிக்கப்பட்ட வேல மரங்கள் நிறைந்த புன்செய் நிலத்தைத் தகுந்த உழவர்கள் எருதுகளைப் பூட்டி உழுவதாகவும் கலப்பைக் கொழு மண்ணைக்

கிளறி மணற் கற்களைப் பெறுவதாகவும் செய்திகள் இடம் பெற்றுள்ளன. எருது கொண்டு உழும் முறை மட்டுமல்லாமல் கழுதை கொண்டு உழும் முறையும் இடம் பெற்றுள்ளது. வயலானது புதுப்புது வருவாயை தந்து கொண்டே இருக்கும். ஆம்பலும் நெய்தலும் அந்த வயலில் பூத்துக் கிடக்கும். வயலில் வேலை செய்யும் பெண்கள் அந்தப் பூக்களுடன் சேர்த்து விளைந்திருக்கும் நெல்லையும் அறுத்துக் கொண்டு வருவர். நெல் கட்டுகளை புழுங்கும்படி செய்து நெல்லடித்து களத்தில் மாடுகளை கட்டிப் போர் அடிப்பர். அம்பணமாக நெல்லைக் களத்தில் குவித்து வைப்பர். குவித்த அம்பண நெல்லை உற்றார் உறவினர் உண்டு மகிழ்வர். எஞ்சிய நெல்லை சேமித்து வைப்பர் என்று உழவர்களின் நிலையை அரிசில் கிழார் கூறுகின்றார்.

புலவர் உழவர்கள் பகன்றைப் பூவைச் சூடி உழவு செய்தமையை, காற்றுடன் கருமேகங்களின் தொகுதி மழை பொழிந்துள்ளது என்று சில கலப்பைகளை உடைய உழவர் பகன்றை மலரைத் தன் தலையில் சூடிக்கொண்டு பலவகையான விதைகளுடன் சென்று விதைப்பர் என்று சுட்டியுள்ளார். இதனை,

**பல்விதை உழவின் சில் ஏராளர்**
**பனித்துறைப் பகன்றை.**

**(பதிற்றுப்பத்து பாடல் - 76)**

என்ற பாடல் அடிகள் விளக்குகிறது.

## முடிவுரை

பதிற்றுப்பத்து என்பது சேர மன்னர்களின் வரலாற்றை மட்டும் கூறும் நூல் அல்ல. அது பண்டைத் தமிழர்கள் அன்றாட வாழ்வியல், பண்பாடு, இயற்கை வளம் மற்றும் சமூக அமைப்பு ஆகிய எல்லாவற்றையும் தனக்குள் அடக்கிக் கொண்டுள்ள ஒரு களஞ்சியம் என்றே கூறலாம். மேலும் பழந்தமிழர் வாழ்வியலைப் புரிந்து கொள்ள உதவும் ஒரு முக்கிய ஆதாரமாகவும் விளங்குகின்றது.

## துணை நூல் பட்டியல்

1. 1.பதிற்றுப்பத்து மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 600098
2. பதிற்றுப்பத்து மூலமும் விளக்க உரையும், சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை - 18
4. பதிற்றுப்பத்து தெளிவுரை, புலியூர் கேசிகன், சென்னை- 600 001
3. சேர மன்னர் வரலாறு, ஔவை துரைசாமி பிள்ளை, அமிழ்தம் பதிப்பகம், சென்னை.